# ஐ.தே.க. பிளவை தடுக்க தொடர்ந்து தீவிர முயற்சி

(கொழும்பு)

ஐ. தே. க. கட்சிக்குழுவும் லலித் கோஷ்டியினரும் நேற்றுமுன் தினமிரவு கறுவாக்காட்டில் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர்.

இந்த சந்திப்பில், ஜனாதிபதி முறையா நாடாளுமன்ற முறையா நாட்டுக்குத் தேவை

(4-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | புரட்டாதி 20 | இதழ்: 237
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 6-10-1991


## நம்பிக்கையில்லா பிரேரணை அரசு வெல்லும்!

[கொழும்பு]

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அடுத்த புதன்கிழமை அரசுக்கு எதிரான நம்பிக்கை

(4-ம் பக்கம் பார்க்க)

## மானநஷ்டம் கோரி சிறிமா வழக்கு

[கொழும்பு]

எதிர்க்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒரு கோடியே 75 லட்சம் ரூபா கோரி "வேக்ஹாலங்" பத்திரிகை நிறுவன ஆங்கில தினசரி ஆசிரியர் திரு எச். எஸ்.

(4ம் பக்கம் பார்க்க)

## எதிர்ப்பு மேலும் வலுக்கிறது

# பிரேமதாஸாவுக்கு எதிராக 7 மாகாண முதலமைச்சர்கள்

## - திவயின தகவல் -

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தை தவிர்ந்த ஏனைய ஏழு மாகாண முதலமைச்சர்களும் ஆதரவு தெரிவித்திருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேல்மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்க, வடமத்திய மாகாண முதலமைச்சர் மகிந்தசோமா, மத்திய மாகாண முதலமைச்சர் எம் திஸநாயக்கா, வடமேல் மாகாண முதலமைச்சர் ஜெயவிக்கிரம பெரேரா, சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் அ. பிலப்பிட்டிய, தென் மாகாண முதலமைச்சர் எம். எஸ். அமரசிறி, ஊவா மாகாண முதலமைச்சர் பேசி சமரவீர ஆகியோரே ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை ஆதரிப்பதாக அச்செய்தி தெரிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## மேற்கு ஜெர்மனியில் அகதி முகாம்கள் மீது எரிகுண்டுத் தாக்குதல்

(பிறுங்போட்)

மே. ஜெர்மனியின் பெரிய நகரங்களில் உள்ள அகதிகள் முகாம்கள் மீது நேற்றும் எரிகுண்டுத் தாக்குதல்களும் பலத்த கல்வீச்சுகளும் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் - எஸ். ரி. எவ். கூட்டு நடவடிக்கை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிகுடிச்சாறு பகுதியில் இராணுவத்துடன் விசேட அதிரடிப்படையினரும் கூட்டாக இணைந்து விமானப்படையின் உதவியுடன் தாக்குதல்

[4-ம் பக்கம் பார்க்க]

## லலித் கோஷ்டியில் மேலும் ஒரு எம்.பி.

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்ட ஐ. தே. கட்சி எம். பி. டாக்டர் பி. எம். சிறில் ஜனாதிபதிக்கு எதிராக லலித் கோஷ்டியில் சேர்ந்துள்ளார்.

(4ம் பக்கம்பார்க்க)

## லலித், காமினி கோஷ்டி சுப்ரீம் கோட்டில் வழக்கு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களான லலித், காமினி உட்பட ஐ. தே. க.வின் 8 அதிருப்தியாளர்கள் கட்சியிலிருந்து தாங்கள் விலக்கப்பட்டதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தாக்கல்செய்துள்ளனர்.

அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியது, தவறுகள் நடந்துகொண்டது, புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியமை ஆகிய குற்றச்செயல்கள்செய்த ஜனாதிபதி பிரேமதாஸாமீது

(4-ம் பக்கம் பார்க்க)

## 12,000 பயிலுனர் ஆசிரியர் விரைவில்நியமனம்

[கொழும்பு]

12, 000 பயிலுனர் ஆசிரியர்கள் விரைவில் நியமனம்செய்யப்படவிருக்கிறார்கள்.

இந்த ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியில் கல்விச்சேவை ஆணைக்குழு தற்பொழுது ஈடுபட்டுவருகிறது.

மேற்படி பயிலுநர் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்படவுள்ளது.

பயிலுனர் ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைக்

(4ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இன்று காலை 6 மணிமுதல் ஊரடங்குச்சட்டம் அமுலுக்கு வந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஈ)

## அயல்நாட்டு தூதர்களுக்கு அநுரா விளக்கக் கடிதம்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டுவந்தது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. திரு. அனுரா பண்டாரநாயக்கா அயல்நாட்டுத் தூதர்களுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

அநுரா எழுதிய அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது: தங்குதடை ஏதுமற்ற நிர்வாகத் தலைமை முறை அபாயங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. தற்போது ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகப் நாடாளுமன்றத்தில் வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தின் உயர்வை நிலைநாட்டி மக்களின் அதிகாரத்தை நிறுவும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-தொண்டா பேச்சுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

"விடுதலைப்புலிகளுடன் அரசுபேச்சுவார்த்தைநடாத்த முற்பட்டால் அது எமக்கு மிக அதிருப்தியைத்தான் ஏற்படுத்தும்".

இவ்வாறு அகில இலங்கை பௌத்த அமைப்பு தமது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடன்பேச்சுவார்த்தை நடாத்த அமைச்சர் திரு.எஸ். தொண்டமான்

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம்; ஈரோஸ் ஆதரவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் வாழும் மக்களுக்கு யுத்த நிறுத்தம் என்ற அடிப்படையில் ஒரு விடிவு ஏற்படுமானால் அதை தாம் வரவேற்பதாக 'ஈரோஸ்' பிரமுகர் ஒருவர் தெரிவித்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை யுத்த நிறுத்தம்

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பை விதை வாங்குகிறோம்: மில்க் வைற், யாழ்ப்பாணம்.
(ஏ-1632)

### வகுப்புக்கள்

ஆண்டு 5இற்கு பிரபல பாடசாலைகளுக்கான அனுமதிப் பரீட்சை மாதிரி வகுப்புகளும் ஆண்டு 4இற்கு புலமைப் பரிசில் மாதிரி வகுப்புகளும் ஆண்டு 6, 7, 8இற்கு சகல பாடங்களும் சிறந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5442)

### வாழ்த்து மடல்கள்

வந்துவிட்டன! வாழ்த்து மடல்கள்!! தித்திக்கும் தீபாவளி வாழ்த்து மடல்களை எதிர்க்கும் வாங்கி அனுப்பிட இன்றே விஜயம் செய்யுங்கள்! சோபிதா, 363, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்
[சி-5439]

### PERSONAL CLASSES

Maths (கணிதம்) G. C. E. (O/L) 90-91 துரித மீட்டல் வகுப்பு மற்றும் ஆண்டுகள் 6, 7, 8, 9, 10ம் வகுப்பு கணிதம் கற்பிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களுக்கு Kana Pararajasekaran, 8D, Fleckers Lane, Chundikuli.
(சி-5428)

### தவறிவிட்டது

4-10-91 அன்று பிற்பகல் 3-45 — 4-15 மணியளவில், தட்டாதெருச் சந்திக்கும், ஸ்ரான்லிக் கடைச் சந்திக்கும் இடையில் K.K.S. றோட்டில் Citizen கைக்கடிகாரம் ஒன்று (பெண்களுக்குரியது) தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள், பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். செல்வரெட்ணம், 106, ஐயனார் கோவில் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
(சி-5447)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### புதிய மாணவரைப் பதிவு செய்தல் கல்வியாண்டு 1990/91

1990/91 கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் 1991 ஒக்ரோபர் மாதம் 25ம் திகதிக்கு முன்னர் தங்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவோரின் இடத்துக்கு வேறு மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

பதிவாளர்

(ஏ-1631)

---

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான

## ஸ்ரீ சண்டிகா ஹோமம் திவ்விய பெரும் யாகம்


7-10-91 மாலை - கணபதி ஹோமம், யாக பூசை, தேவி மகாத்மிய பாராயணம்.

8-10-91 பகல் - யாகபூசை, சண்டிகா ஹோமம், சங்காபிஷேகம், திருவுலா
மாலை நவராத்திரி விசேட பூசை

(சி-5398) சோ. இ. சிவசங்கரசர்மா.

---

## 31-ம் நாள் 'நினைவஞ்சலி



### சுவக்கீன் மரியாம்பிள்ளை (இராசு)

(மர வியாபாரி, நெல்லியடி)

மண்ணுலகு: 09-06-1927 விண்ணுலகு: 06-09-1991

குறைவின்றி எம்மையெல்லாம்
நிறைவுடனே ஆக்கிவைத்தாய்.
உன் நினைவெல்லாம் நிறைவாகுமுன்
இறைபதந்தான் சென்றதென்ன?

மரக்காலை,
நெல்லியடி,
கரவெட்டி.

பிரிவினால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகன்.
(சி-5444)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### லெப். செல்வம்

[சிவப்பிரகாசம் - ரமேஸ்குமார்]

தாயின் மடியில்: 19-03-1972 தாயக மண்ணில்: 17-10 1990

திதி: 06-10 1991

எமது செல்வமே ரமேசா நீர் எங்களைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் எமக்கு இது ஒரு கனவுதான் உமது செல்லப் பேச்சும் சிரிப்பும் அம்மா என்ற அன்புக் குரலும் எங்கள் எல்லோர் நெஞ்சிலும்நிறைந்து நிற்கிறது உமது ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்:
பப்பா, அம்மா, அண்ணன்மார்,
அக்கா, தங்கை, தம்பிமார்.


த. சிவப்பிரகாசம்
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

[சி-5484]

---

## 31ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

09 10 91



அமரர்

### Dr. ஆறுமுகம் தர்மலிங்கம்

(இளைப்பாறிய பதிவு வைத்திய உத்தியோகத்தர்)

மலர்வு: 25-04-1930 உதிர்வு: 09-09-1991

அணைந்தது ஓர் அன்புதீபம் - என்றும்
அணையாத எங்கள் பாசதீபம்
மறைந்தது எங்கள் மணிவிளக்கு - என்றும்
மங்காத குடும்ப குலவிளக்கு

நின் பிரிவில் வாடும்:
மனைவி: திருமதி மங்கையற்கரசி தர்மலிங்கம்
மக்கள்: பாஸ்கரன் (U.K.) பாஸ்கரி,
மனோகரன் (U. K)
மருமகன்: Dr. A. கேதீஸ்வரன்
(வைத்திய பொறுப்பதிகாரி
களுவாஞ்சிக்குடி)

"மாங்கனி வனம்"
கல்லுவம்.

(சி-5429)

---

உ

## 60-வது நிறைவு நாள் அஞ்சலி



அமரர்

### முருகேசு நல்லதம்பி (J. P.),

தோற்றம்: 02 06-1912 நிறைவு: 06-08-1991

ஆற்றலும் அறிவும் அரவணைக் கொண்ட
ஏற்றுயர் தலைவர் எங்கள் நல்லதம்பி
போற்றும் ஆசிரியராய் வியாவில் பதியில்
பொறுப்புடன் முப்பத்தைந் தாண்டாய் அமர்ந்தனை
ஏற்றமிகு ஐக்கிய நாணய சங்க
ஏன்ற பொருளாளனாய் ஐம்பத்தைந்தாண்டு
ஆற்றிய சேவை அவனியில் பெரிது
அன்புடன் நாமே என்றும் போற்றுதும்

இணையிலா சமாதான நீதிவானுயும்
இதர சமூக நிறுவனங்களிலும்
இணைந்து செய்த சேவையை மறக்கிலம்
இன்று நடேசர்பாதம் நண்ணினையோ?
துணையின்றி தவிக்கும் ஆருயிர் மனைவி
தூய மக்கள் மாண்புடை சோதரர்
இணையிலா உறவினர்க்கும் சிதம்பர நடேசர்
இன்னருள் என்றென்றும் இனிதே கிட்டுக.

வியாவில் ஐ. நா. சங்கம்

காரைநகர். (சி-5431)

## யாழ். கோட்ட பாடசாலை விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்ட பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி உடனடியாக விபரங்களுடன் யாழ். கோட்டக் கல்விப்பணிப்பாளரிடம் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை நேரசூசிப்படி கற்பிக்கப்படும் சகல பாடங்களையும் ஒவ்வொரு பாடத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரிய ஆளணியையும், தற்போது பாடசாலையில் உள்ள ஆசிரியர் தொகையினையும், பற்றாக்குறை ஆசிரியர்களையும் பற்றிய விபரங்களை நாளை 7ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கும்படி யாழ். கல்வித்திணைக்களம் கோரியுள்ளது. (152)

## "கல்வியே தமிழ் மக்களின் அரும் பெரும் சொத்தாகும்"

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரும் பெரும் சொத்து கல்வியே யாகும் என்று யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெயநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: "மாணவர்கள் பரீட்சைகள் எப்போது நடக்கும் என்பதை மட்டும் கருதாது கல்வியில் அதிக கவனம் செலுத்தி தொடர்ந்து கற்கவேண்டும். பரீட்சைகளை உரியகாலத்தில் நடாத்துவதற்கும் அவற்றின் பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கும் யாழ். கல்வித் திணைக்களம் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இன்றைய மாணவர்களில் பலர் தனிப்பட்ட "ரியூஷன்" கல்வியிலும் சுயமாக பாடங்களைக் கற்கும் ஆற்றலை இழந்துவருகின்றார்கள். பாடசாலைகளில் முழுமையான கல்வியை பெற முயற்சிக்கவேண்டும்".

விழா ஆரம்பத்தில் வண. ஜி. டி. ஆனந்தராஜன் ஆராதனையை நிகழ்த்தினார். ஆண்டு அறிக்கையை கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெயநேசன் சமர்ப்பித்தார். பரிசில்களை இணுவில் மக்லோயிட் வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் திருமதி ஜோய் கனகராஜா வழங்கினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இறுதியில் நடைபெற்றன. (72)

## வவுனியா தமிழ் வித்தியாலயம் தரமுயர்த்தப்பட்டது

(வவுனியா)

வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் மத்திய மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இங்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள்.

இதுவரை காலமும் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் தமது கல்வியை உபகாரச் சம்பளத்தோடு தொடர்வதற்காக வெளி மாவட்டங்களுக்கே செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (153)

## போக்குவரத்தில் சிறு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்ட மண்ணெண்ணை அனுமதி சனிக்கிழமையாக மாற்றப்பட்டதனாலும் ஒரே நாளில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் செல்வதனால் ஏற்படும் நெருக்கடிகளையும் குறைக்கும்முகமாக, வவுனியா வியாபாரத்தின் நோக்கமாக செல்பவர்க்குரிய போக்குவரத்தில் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஞாயிறு, திங்கள் – வவுனியா, மன்னார் மாவட்டம். செவ்வாய், புதன்: முல்லைத்தீவு மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் வியாழன், வெள்ளி: யாழ்ப்பாணம், கிளிநொச்சி.

தொடர்ந்து வரும் சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பின்னர் வவுனியா மன்னார் என்ற வரிசைக் கிரமத்தில் அனுமதி வழங்கப்படும்.

## அரசியல்வாதிகள் தமது சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும்!

### — காமினி

(கொழும்பு)

"அரசியலில் ஈடுபட்டது முதல் இன்று வரை எல்லா அரசியல் வாதிகளும் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேண்டும் அல்லது அவர்களின் சொத்துக்களை ஆராய கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் திரு காமினி திஸநாயக்கா, பதுளையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

திரு லலித் அத்துலத்முதலி, திரு. ஜி. எம். பிரேமச்சந்திர மற்றும் தனக்கும் எதிராக ஜனாதிபதியும் அவர் சார்களும் பல குற்றச்சாட்டுகளை சுமத்தி ஒட்டப்பட்ட சுவரொட்டிகளும் செய்யப்பட்ட பிரச்சாரங்களுமே தனது இக் கோரிக்கைக்கு முக்கிய காரணமென்று திரு. காமினி மேலும் கூறினார். (வி)

## இந்திய மீனவர்கள் கொழும்பில்

(கொழும்பு)

நெடுந்தீவுக் கடலிலிருந்து விடுதலைப் புலிகளால் அண்மையில் மீட்கப்பட்ட 21 தமிழ் நாட்டு மீனவர்களும் நேற்று கொழும்பு சென்றடைந்தனர்.

நேற்று முன்தினம் மேற்படி மீனவர்களை விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களிடம் யாழ். நகரில் வைத்து ஒப்படைத்தது தெரிந்ததே. (வி)

## பென்சன் வவுச்சர்கள்

(மானிப்பாய்)

ஆகஸ்ட் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்கள் நேற்று யாழ். செயலகத்திலிருந்து உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

இவற்றை கிராமிய வங்கியில் பெற்றுக்கொள்பவர்களும் மற்றும் ஏனைய வங்கிக்குரியவர்களும் நாளை 7-ம் திகதி திங்கட்கிழமை முதல் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. [71]

## புலிகளுக்கு உதவியவர் கோவையில் கைது

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு உதவியவர் என்ற சந்தேகத்தின் பேரில் கோவைக்கு அருகிலுள்ள துடியலூரில ரவி என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள விக்கினேஸ் என்ற போராளியின் சகாவாக இவர் இருந்தாராம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நவராத்திரி பூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன் கோயில் நவராத்திரி விரத பூஜை இன்று 6-ந் திகதி காலை 8-00 மணிக்கு மகாகணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகிறது மாலை நக்ஷத்திர ஹோமமும் இடம் பெறவிருக்கிறது.

7-ந் திகதி காலை 8-00 மணிக்கு ஏகாதசருத்ர ஹோமமும் நடைபெறவிருக்கிறது.

8-ந் திகதி முதல் 15-ந் திகதி வரை பிரதி தினமும் சண்டி ஹோமம், 108 சங்காபிஷேகம், பூஜை இலச்ஷார்ச்சனை, ஸ்ரீசக்கரமேருயந்த்ரபூஜை சப்தசதீபாராயணம், நவராத்திரி விஷேசபூஜை பஞ்சமுகார்ச்சனை ஆகியவை இடம் பெறவிருக்கிறது.

இம்மாதம் 16-ந் திகதி புதன் கிழமை மஹாநவமி தினத்தன்று காலை குமாரிபூஜை, சுவாஸினி பூஜையும் நவாவரண ஹோமமும் இடம்பெறவிருக்கிறது.

17-ந் திகதி விஜயதசமியன்று காலை 11-00 மணிக்கு வித்யாரம்பம் இடம் பெற்று மாலை மானம்பூ உற்சவமும் திருஊஞ்சலும் நடைபெறவிருக்கிறது. (153)

## 2,000 இலங்கையர் குவைத் பயணம்

(கொழும்பு)

வளைகுடாயுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து தற்போது மாதமொன்றுக்கு 2000 இலங்கையர்கள் குவைத்துக்கு வேலை பெற்று செல்கிறார்கள்.

குவைத்தில் வேலைவாய்ப்பு பெறும் இலங்கையர்களின் தொகை மேலும் அதிகரித்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் திரு டேவிட்சொய்சா தெரிவித்தார். [153]

## தீவிரவாதத்தை பூண்டோடு அழிப்பேன்! - ஜெயலலிதா

(சென்னை)

தமிழ்நாட்டில் தீவிரவாதத்தை பூண்டோடு ஒழிப்பேன் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகாத்மா காந்தியின் 122 பிறந்ததின விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

மெரீனா பீச்சில் நடந்த இக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.

அவர் மேலும் பேசுகையில் தீய சக்திகள் வன்செயல் புரிவதை அனுமதிக்க மாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள வேட் போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நிகழும். இத்தொடர் சொற்பொழிவில் '60 ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்' எனும்பொருள் பற்றி மூதறிஞர் திரு. க. சி. குலரத்தினம் உரை நிகழ்த்துவார்.

## பாஸ்போட் தரகர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

பாஸ்போட் தரகர்கள் தினமும் கொழும்பில் கைதுசெய்யப்பட்டு வருவதாக கொழும்பு பொலிஸ் தலைமைச்செயலகம் தெரிவித்துள்ளது

பாஸ்போட் காரியாலயத்தின் முன்னால் தினமும் கூடும் பொதுமக்களிடம், மேற்படி தரகர்கள் ஏமாற்றும்வேலைகளில் ஈடுபட்டுவருவதாக பொதுமக்களிடமிருந்து கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்படுவதாக கோட்டைப் பொலிஸ்நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களிடமிருந்து பல போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். [வி]

## அருள்மாதா திருநாள்

(ஊர்காவற்றுறை)

யாழ். இராசாவின்தோட்டம் அருள்மாதா வழிபாடுகள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

அருட்திரு. எஸ். மங்களராசா அடிகள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார். இம்மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் திருச்சொரூப ஆராதனையுடன் விழா நிறைவுபெறும். (59)

## ராசி பலன்

**06-10-1991**

**ஞாயிற்றுக்கிழமை**

தமிழுக்கு புரட்டாதி 20

திரயோதசி: காலை 6-03 வரை சதுர்த்தசி: பின் இரவு 4 36 வரை பூரம்: முற்பகல் 10-28 வரை. சித்தாமிர்தம் இராகு காலம்: மாலை 4-32 முதல் 6-02 வரை. சுபநேரம்: காலை 9-02 முதல் 10-32 வரை.

மேடம்: காரியஜெயம், தனலாபம், தொழில் மகிழ்ச்சி.

இடபம்: குடும்பத் துன்பம், தொழில் இழப்பு, பணமுடை.

மிதுனம்: காரியத் தாமதம், அஞ்சத்தனம், வெறுப்பு.

கடகம்: இனசன மகிழ்ச்சி, விடாமுயற்சி விடாப்பிடி.

சிங்கம்: காரிய அலைச்சல், அஞ்ஞானவாசம், இடர்ப்பாடு

கன்னி: புத்திரர் மகிழ்ச்சி, விவேகம், குடும்ப சுகம்.

துலாம்; பயணத் துன்பம். வேண்டாத உறவு, வைத்தியச் செலவு.

விருச்சிகம்: தடுமாற்றம், பகைவர் தொல்லை, அவசரப் போக்கு

தனுசு: நல்னம்பிக்கை இன்மை, பகை உணர்வு, யோசனை.

மகரம்: குடும்ப சிந்தனை, மகிழ்ச்சியற்றநிலை, கடன்சுமை

கும்பம்; உடல்நிலை பாதிப்பு, மாமனார் துயரம், கூடாநட்பு

மீனம்; காரியசித்தி, குடும்ப உறவு, தொழில் சிறப்பு.

ஜோஸ்யர்


"A" LEVEL CENTRE

[உயர் தராதர கல்வி நிலையம்]

பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

93-ம் ஆண்டுக்கான வகுப்புகள் ஆரம்பம்

ஆசிரியர்கள்:

| | |
|---|---|
| தாவரவியல் | திரு. சிவவீரசிங்கம் B. Sc. |
| விலங்கியல் | திரு. தம்பிராஜா B. Sc. |
| பௌதிகவியல் | திரு. சௌந்தி B. Sc. |
| தூய/பிரயோககணிதம் | திரு. கணேசன் B. Sc. |
| இரசாயனவியல் | திரு. நாகரட்ணம் B. Sc. |

★ 15-10-91க்கு முன்பதாக அனுமதியை பெற்றுக்கொள்ளவும். [எ-1638]

# இந்திய அமைதிப் படைக்கு கம்போடியா அழைப்பு

[லண்டன்]
இந்திய அமைதி காக்கும் படையை தமது நாட்டிற்கு அனுப்புமாறு கம்போடியா இந்தியாவிடம் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரத்தின் கீழ் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளுக்கு இந்திய அமைதிப்படையை அனுப்பி உதவுமாறு கம்போடியா இந்தியாவைக் கேட்டுள்ளது கடந்த பலவருடங்களாக உள்நாட்டுப் போரில் சிக்கித் தவித்துவரும் கம்போடியா தற்போது பொதுத்தேர்தல் நடாத்தும் உடன்பாடொன்றை எட்டியுள்ளது.

# ஆனையிறவில் நேற்று திடீர் மோதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவுப் பகுதியில் நேற்று இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் திடீர் மோதல் ஏற்பட்டது.

நேற்றுக்காலை 8-30மணியளவில் ஆனையிறவு முகாமிலிருந்து இராணுவத்தினர்வெளியேறியபோது, 75யார் தூரத்தில் வைத்து புலிகள் வழிமறித்து தாக்கினர்கள்:

புலிகளின் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்ட பலத்த இழப்புகளுடன் முகாமுக்குள் திரும்பிச்சென்றனர். [வி]

## ஆந்திரா நக்ஸலைட்டுகளுக்கு மட்டக்களப்பு பிரமுகர் ஆயுத விநியோகம்

[புதுடில்லி]
ஆந்திர பிரதேசத்திலுள்ள நக்சலைட்டுகளுக்கு மட்டக்களப்பிலுள்ள முக்கிய பிரமுகர் ஒருவர் ஆயுதம் வழங்கியுள்ளதாகஆந்திர சட்ட சபையில்குற்றம் சாட்டப்பட்டுள்ளது

ஏ. கே. 47 போன்ற ஆயுதங்களே இவ்வாறு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

ஆந்திர பிரதேசத்தில் நக்ஸலைட்டுகளால் 29 பொலிசார்கள் இதுவரையும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனராம்

## அரைநேர பாடசாலை

[யாழ்ப்பாணம்]
உலக ஆசிரியர் தினநிகழ்ச்சிகளை நிறைவு செய்யும் முகமாக யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணியுடன் மூடப்படும் மாலை வேளை நிகழ்ச்சிகளில் ஆசிரியர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## விமர்சன அரங்கு

[யாழ்ப்பாணம்]
கைதடிமேற்குசரஸ்வதி கல்வி அபிவிருத்தி நிறுவன மாணவர்களின் தயாரிப்பான 'வெறுமையும் ஒரு நாள் புனிதமாகும்' என்ற நாடகம்பற்றிய விமர்சன அரங்கு இன்றுமாலை கைதடியில் நடைபெறவுள்ளது.

க. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கலைஞர்கள், பொது அமைப்புக்களின் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு விமர்சன உரை நிகழ்த்துவார்கள்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் பிரிவுக்குட்பட்ட அனைத்துத் துறைசார்ந்த (எழுத்தாளர்கள், ஓவியர்கள், நடிகர்கள், பாடகர்கள், நடனம், சங்கீதம், நாதஸ்வரம், தவில்) என்பன அடங்கிய சகல கலைஞர்களுக்குமான ஓர் முக்கிய கலந்துரையாடல் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் இன்று காலை 10 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## ஓடு பிரித்து திருட்டு

[யாழ்ப்பாணம்]
கோப்பாய் சந்திக்கருகாமையிலுள்ள பலசரக்குக் கடை ஒன்றில் நேற்று முன்தினமிரவு ஓடு பிரிக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன எஸ். இராசரத்தினம் என்பவரதுகடையிலேயே மேற்படி திருட்டு நடைபெற்றுள்ளது சிகரட்கட்டுகள், பால்மா வகைகள், மூவாயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்பட சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

## 12,000 பயிலுனர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இம்மாதம் வெளியாகும் வர்த்தமானியில் இப்பரீட்சை தொடர்பான விபரங்கள் வெளியாகவுள்ளன.

# 132 விமானப் படையினர் விமான விபத்தில் பலி

[ஜகர்த்தா]
இந்தோனேஷியாவில் நேற்று ஏற்பட்ட விமான விபத்தில் 132 விமானப் படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்படி விமானம் நேற்றுப் பகல் இந்தோனேஷியா தலைநகர் ஜகர்த்தாவிலுள்ள சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானப்படை விமானம் சில நிமிடங்களில் விபத்துக்குள்ளாகி. இதில் சென்ற 132 விமானப்படை வீரர்களும் கொல்லப்பட்டனர்.

இவ் விமானத்தில் சில விமானப்படை உயரதிகாரிகளும் இருந்ததாகவும், இந்த விமானம், அரசுக் கட்டிடம் ஒன்றுடன் மோதியதாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## மரண அறிவித்தல்

### திருமதி வெற்றிவேலு செல்லாச்சிப்பிள்ளை

திருமதி வெ. செல்லாச்சிப்பிள்ளை 30-09-91 திங்கட்கிழமை மல்லாகத்தில் சிவபதமடைந்தார். இவர் துரைராசா (Rtd. Staff Assistent Port Commission) திருமதி ச. நாகம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி து. கமலநாயகி, சி. சடாட்சரம் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்). ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr. திருமதி ஸ்ரீகௌரி விஷ்ணுமாலா (U.K), ஸ்ரீ ரவீந்திரன் (France), ஸ்ரீ ரவிச்சந்திரன் (U. K.), ஸ்ரீ ரவிச்செல்வன் (கனடா), திருமதி ஸ்ரீ வசந்தி ஆனந்ததேவன் (கனடா). ஸ்ரீ ரவிஷங்கர் (St. Antony's Colombo), ரஞ்சித்குமார் (U. K), ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-10-91ல் மல்லாகத்தில் நடைபெற்றது: இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து. ஸ்ரீரவீந்திரன்

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.

(சி 5449)

### திருமதி மணிமேகலை இராசலிங்கம்

திருநெல்வேலி தாளையடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி மணிமேகலை இராசலிங்கம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையா, தையல்முத்து ஆகியோரின் ஏக புத்திரியும், திரு. இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், அமிர்தவல்லி, திருமதி இராசேஸ்வரி, சண்முகநாதன், காந்தரூபன், (ரூபன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி மாக்கற்), சாந்தரூபன் (சுவிற்சலாந்து), சுரேந்திரன், லிங்கேஸ்வரன், சுரேஸ், சசிகலா, ரதிகலா, கிரிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும். திரு. பொ. சண்முகநாதன் (சின்னராசா, இராணி ஸ்ரோர்ஸ், காலி), அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருளானந்தம், யோகானந்தம், செல்வராசா, மேகின்பநாயகம், பத்மாவதி, சரோஜினிதேவி, தில்லைநாதன் (கனடா), சற்குணவதி ஆகியோரின் அன்புச்சகோதரியும், சற்குணராசா, சத்தியநாதன் வரதராசன், பரமேஸ்வரி, ஜெகபவனி, பங்கயவல்லி, கமலாதேவி, இரஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 06-10-91 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
திரு. இராசலிங்கம்
ரூபன் ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலி மாக்கற்.

தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
(சி 5448)

## எதிர்ப்பு மேலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ளது.

இதேவேளை மேற்படி செய்தியை மறுத்துள்ள அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா இந்த ஏழு முதலமைச்சர்களும் ஜனதிபதிக்கு ஆதரவாகவே உள்ளதாக தெரிவித்துள்ளார். (சி 153)

## லலித், காமினி

(1ம் பக்கத் தொடர்ச்சி)
விசாரணை நடத்த வேண்டும் என்ற பிரேரணையைக்கொண்டுவந்ததாய் இவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இலங்கை அரசியல் அமைப்புப்படி ஒரு கட்சியிலிருந்து ஒருவர் நீக்கப்பட்டால் அவர் எம். பி. பதவியை இழப்பார். ஆனால் தனது நீக்கம் குறித்து அவர் ஒரு மாதத்துள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யலாம்.

## யுத்த நிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றிற்கு தாங்களும் ஆதரவு தெரிவித்திருப்பதாக கூட்டணியும், ரெலோவும் தெரிவித்துள்ளதாகவும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது. (சி)

## புலிகள்-தொண்டா

(1ம் பக்கத் தொடர்ச்சி)
விரும்பினல் முதலில் அவர் தமது அமைச்சர் பதவியை ராஜினமா செய்துவிட்டு சாதாரண பிரஜையாகத்தான் செல்லவேண்டுமென்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## அயல்நாட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இந்த வகையிலான முதல் நடவடிக்கையே ஜனதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையாகும். 1988-ல் ஜனதிபதி தேர்தல் நடைபெற்றபோது நிர்வாக அதிபர் முறை ரத்துச் செய்யப்பட்டு, நிர்வாக அதிகாரங்கள் அனைத்தும் நாடாளுமன்றத்திடமும், அமைச்சரவையிடமும் இருக்க வேண்டுமென தனது தேர்தல் அறிக்கையில் சுதந்திரக்கட்சி தெளிவு படுத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## விடுதலைப் புலிகள் வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகைநாளைவெளிவருகின்றது.

பல சுவையான அம்சங்களை உள்ளடக்கிய 20 பக்கங்களைக் கொண்ட இப்பத்திரிகையுடன் ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த 573 வீரவேங்கைகள் பற்றி 45 பக்கங்களைக் கொண்ட விசேட இணைப்பொன்றும் இணைக்கப்பட்டுள்ளதினல் இப்பத்திரிகையின் விலை 25/- ரூபாவாக விற்கப்படும். (வி)

## லலித் கோஷ்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர் குழுவின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## நம்பிக்கையில்லா

1-ம் பக்கத் தொடர்ச்சி)
யில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடுமென்று இதன் மீதான விவாதம் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறக்கூடுமென்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (153)

## இராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை நேற்று வரை நடைபெற்றன.

விமானங்கள் தொடர்ந்து உக்கிரமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை இப்பகுதியில் நடத்தி வருகின்றன.

## கண்காட்சி

[யாழ்ப்பாணம்]
யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த 9 நாட்களாக நடைபெற்றுவரும் மாமனிதர் கலைஞானி அவர்களின் அரும்பொருட் கண்காட்சி புதன்கிழமைவரை மேலும் மூன்று நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. (வி)

## மேற்கு ஜெர்மன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கின்றன.

கடந்த சில நாட்களாக மே. ஜெர்மனியிலுள்ள அகதிகள் முகாம்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (வி)

## ஐ. தே. க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யென சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தவேண்டுமென லலித் கோஷ்டி வலியுறுத்தியதாகவும் ஆனல் ஐ. தே. க. குழு இதனை ஏற்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரு தரப்பையும் இணைக்கும் முயற்சி கடந்த இருவாரமாக நடைபெற்றுவருகின்றபோதும் இதுவரை ஆக்கபூர்வமான பலன் எதுவும் கிடைக்கவில்லையாம். (சி-153)

## மானநஷ்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டி. சகித்தபாலாவுக்கு எதிராக மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

'சண்டே ஒப்ஸவர்' பத்திரிகைகளில் தமக்கெதிராக வெளிவந்த 3 ஆசிரியத் தலையங்கங்களுக்காகவே திருமதி சிறிமா கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதிமன்றில் இம்மான நஷ்ட வழக்கை தாக்கல்செய்தார். (சி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Postoffice Lanka under Licence Number B/10836/81.